# <u>பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியர்</u>

Praise the Lord: Let us pray.

ஒரு வசனத்தை நாம் வாசிப்பதும், அந்த வசனம் நம்மிலே ஜீவிப்பதும் வெவ்வேறான காரியம்.
ஒரு வசனம் நம்மிலே ஜீவிப்பதும், அது வளர்ந்து பூரணப்படுவதும் வெவ்வேறான காரியம்.
கிறிஸ்தவர்களாக வாழ்வது வேறு. கிறிஸ்துவுக்குள் வளர்வது வேறு.

நாம் கிறிஸ்தவர்களாக வாழ்பவர்கள் என்று சொல்வதைவிட,
கிறிஸ்துவுக்குள் வளர்பவர்கள் என்று சொல்வது சிறப்பானது. ஆமென்.

கிறிஸ்துவின் அன்பு நம்மை ஒவ்வொருநாளும் நெருக்கி ஏவுகிறபடியினால்,
நாம் அவருக்குள் வளருகிறோம். ஆமென்.

*வேதம் சொல்கிறது:*

உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது. (2 கொரிந்தியர் 4:16)
yet the inward *man* is being renewed day by day. (KJV) (2 corinthians 4:16)

கடந்த ஜெப ஆராதனையில், கர்த்தரால் உணர்த்தப்பட்ட வசனங்கள், தியானங்கள், ஜெபங்கள்: நம்மை நாளுக்கு நாள் புதுப்பித்து, இன்று மேலும் கர்த்தருக்குள் வளர்ந்தவர்களாக, ஒன்றுகூட வைத்திருக்கிறது என்பதை உணர ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியானவர் நம்மை ஆட்கொள்வாராக. ஆமென்.

கர்த்தருக்குள் புதிய <u>சிருஷ்டியான நாம்</u>, புதிதான ஜீவனுள்ளவர்களாய் <u>நடந்துகொள்ளும்படிக்கு</u>, கிறிஸ்துவினாலே நம்முடைய உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் <u>புதிதாக்கப்படுகிற</u> ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட பரிசுத்த ஜாதியாக,

கர்த்தராலே ஒன்றுகூட்டப்பட்டிருக்கிற நாம்.....நமது வாழ்க்கை பல்வேறு சூழ்நிலைகளில்.......

சில நேரம்.... தனித்திருந்து ஜெபிக்கிற நேரம் உண்டு:
..... குடும்பமாக ஜெபிக்கிற நேரம் உண்டு:
ஒருவரிடம் பேசிக்கொண்டிருக்கும்போதே ஜெபிக்கிற நேரமுண்டு:
ஒரு வேலையை செய்துகொண்டிருக்கும்போது ஜெபிக்கிற நேரமுண்டு:
வேதத்தை தியானித்து தியானித்து ஜெபிக்கிற நேரமுண்டு:

இப்படி இன்னும் எவ்வளவோ சூழ்நிலைகளில் நாம் ஒவ்வொருவரும் கர்த்தரோடு ஜெபத்திலே மன்றாடி வருகிறோம். அதன்மூலம் காத்தரிடம் பெலனைப்பெற்று, மேலும் கிறிஸ்துவுக்குள் வளர அவருக்காக செயல்படவும் கர்த்தர் நம்மை வழிநடத்துகிறார். ஆமென்.

இந்த நேரத்திலே விசேஷமாக ஜெபிக்க ஒன்று கூடியிருக்கிறோம்.
நம் ஒவ்வொருவரின் தேவைகளையும் நாம்,
கிறிஸ்துவுக்குள் ஒருமனப்பட்டு ஜெபிக்க ஒன்றுகூடியிருக்கிறோம். ஆமென்.

வாஞ்சையோடு விசுவாசத்தோடும் உற்சாகத்தோடும் ஆவியோடும் கருத்தோடும் பரிசுத்த கர்த்தரை நோக்கி ஜெபிக்க ஒன்று கூடியிருக்கிறோம் என்பதை மட்டும் இப்பொழுது தயவுசெய்து நினைவில் வையுங்கள்.
இதைத்தவிர மற்ற எல்லா சிந்தைகளையும் உங்கள் பெலவீனங்களையும் இந்த ஜெபநேரத்தில் அகற்றிவிட முழுமனதோடும் கர்த்தருடைய பயபக்தியோடும் முயற்சிசெய்யுங்கள்..

நாம் நோக்கிப்பார்க்கும் தேவன் எப்படிப்பட்டவர்?

**<u>எபிரெயர்/Hebrews 4:15</u>** (பக்கம் 301)

நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், **<u>பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே</u>** நமக்கிருக்கிறார்.
For we do not have a High Priest who cannot sympathize with our weaknesses, but was in all points tempted as we are, yet without sin. (NKJV)

இதை ஒவ்வொரு நாளும் உங்கள் மனதிலே புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

தேவனுக்கு முன்பாக நிற்கும், நாம் எப்படிப்பட்டவர்கள்?

**<u>எபிரெயர்/Hebrews 5:1-3</u>** (பக்கம் 301)

1. அன்றியும், மனுஷரில் தெரிந்துகொள்ளப்பட்ட எந்தப் பிரதான ஆசாரியனும் பாவங்களுக்காகக் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்படி, மனுஷருக்காகத் தேவகாரியங்களைப்பற்றி நியமிக்கப்படுகிறான்.
2. தானும் பலவீனமுள்ளவனானபடியினாலே, அறியாதவர்களுக்கும் நெறிதப்பிப்போனவர்களுக்கும் இரங்கத்தக்கவனாயிருக்கிறான்.
3. அதினிமித்தம் அவன் ஜனங்களுடைய பாவங்களுக்காகப் பலியிடவேண்டியதுபோல, **<u>தன்னுடைய பாவங்களுக்காகவும் பலியிடவேண்டியதாயிருக்கிறது.</u>**

For every high priest taken from among men is appointed for men in things pertaining to God, that he may offer both gifts and sacrifices for sins. 2 He can have compassion on those who are ignorant and going astray, since he himself is also subject to weakness. 3 Because of this he is required as for the people, so also for himself, to offer sacrifices for sins.

நமக்கும் நம் தேவனுக்கும் உள்ள ஐக்கியம் ஒவ்வொரு நாளும் வளர கர்த்தர் உதவி செய்வாராக.

" ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாய்.....இருக்கிறீர்கள்." என்று வசனம் நமக்கு உணர்த்துகிறது
**1 பேதுரு/1 Peter 2:9** (பக்கம் 318)
பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்......
அவர்களில் பிரதான பாவி நான். என்றும் வசனம் நமக்கு உணர்த்துகிறது.
**1 தீமோத்தேயு / 1 Timothy 1:15** (பக்கம் 286)
.....நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம். என்றும் வசனம் நமக்கு உணர்த்துகிறது.
**2 கொரிந்தியர் / 2 Corinthians 7:1** (பக்கம் 250)
இந்த 3 வசனங்களையும் இணைத்து மீண்டும் மீண்டும் வாசித்து தியானியுங்கள்.
கர்த்தர் உங்கள் இருதயங்களை ஆட்கொண்டு ஆசீர்வதிப்பார்.

பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரை...
நோக்கி ஜெபிக்க தடை எதுவும் வராமலிருக்க, நமது மாம்ச கண்களை மூடி, இந்த உலகத்தின் சூழ்நிலைகளை மறைத்துக் கொள்ளப்போகிறோம். நம்மிடத்திலே உள்ள தேவபயம் அதை நமக்கு கொண்டுவரும்.

இங்கு ஜெபிக்கிற ஜெபங்களை கேட்டு, நாம் ஒருமனப்பட்டு ஜெபிக்க,
நாம் காதுகளை கவனமாக திறந்துவைப்போமாக........
வேறு எதையும் நாம் கேட்காமல் இருக்க நாம் நம்மை காத்துக்கொள்வோம்.
நம்மிடத்திலே உள்ள தேவபயம் அதை நமக்கு கொண்டுவரும்.

வாய் ஜெபத்தை பெலத்தோடு அறிக்கை பண்ணட்டும். கர்த்தருடைய நாமத்தையும் ஜெபத்தையும் தவிர வேறு எதையும் நம் வாய் இந்த நேரத்திலே பேசாதிருப்பதாக.
நம்மிடத்திலே உள்ள தேவபயம் அதைகொண்டுவரும்.

*சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைப்போம்.*
நம்முடைய இந்த நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல்
உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்.
Let us hold fast the confession of our hope without wavering, for He who promised is faithful. (NKJV)
*விசுவாசத்தோடு ஜெபிக்கவும், ஜெபத்திற்கு ஒருமனதோடு ஆமென் சொல்லவும், தயவுசெய்து எழுந்து நிற்போம்.*

Let us Pray

சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும், கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் இயேசுகிறிஸ்து மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று.
For God was pleased to have all his fullness dwell in Christ, and through Christ to reconcile to himself all things, whether things on earth or things in heaven, by making peace through his blood, shed on the cross.
(கொலோசெயர் 1:19-20)